සියලුම හිමිකම් ඇවිරිණි
முழுப் பதிப்புரிமையுடையது
All Rights Reserved

දකුණු පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව
தென் மாகாணக் கல்வித் திணைக்களம்
Department of Education, Southern Province

දෙවන වාර පරීක්ෂණය - 2021
இரண்டாந் தவணைப் பரீட்சை – 2021

| | | |
|---|---|---|
| 10 ශ්‍රේණිය<br>தரம் 10 | දෙමළ - I<br>தமிழ் மொழியும் இலக்கியமும்- I | පැය 01 යි<br>01 மணித்தியாலம் |

தமிழ் - I

**அறிவுறுத்தல்கள்**

- **எல்லா வினாக்களுக்கும் விடையளிக்குக. .**
- **01 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட வினாக்களில் சரியான அல்லது மிகப்பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**
- **உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாக்களுக்கும் நீங்கள் தெரதிவு செய்த விடையின் இலக்கத்தை ஒத்த இலக்கத்தை கொண்டுள்ள வட்டத்தினுள்ள புள்ளடியை (×) இடுக**

---

- தடித்த எழுத்தில் அமைந்த சொல் பற்றிய வினாவுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.

(01) “ககன சித்தர் வந்து வந்து காயசித்தி விளைப்பர் …” இங்கு **ககனம்** என்பது,

(1) பூமி (2) கானம் (3) ஆகாயம் (4) நிலம்

(02) “கொற்றத் தார்க் குரிசில் ……” என்பதில் கொற்றம் என்பதன் சமபதம்

(1) மாலை (2) தோல்வி (3) மலை (4) வெற்றி

(03) “தன்மையிலாள ரயலிருப்பு மிம்மூன்று .. இங்கு அயல் என்பதன் எதிர்ப்பதம்

(1) பக்கத்தில் (2) அருகில் (3) தூரத்தில் (4) சமீபத்தில்

(04) “தண்டா மரையினுடன் பிறந்தும் …” என்ற அடிகளில் தண் என்ற பத்தின் எதிர்ப்பதம்

(1) இயற்கை (2) குளிர்ச்சி (3) சூடு (4) வெயில்

(05) “என் மனைவியின் பொழுதுபோக்கு திசைமாறி விட்டது…” இங்கு மனைவி என்பதன் எதிர்ப்பால் சொல்

(1) கணவன் (2) மனையாள் (3) மனைவன் (4) மணவான்

- பின்வரும் வினா ஒவ்வொன்றுக்கும் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

(06) பாரிய வழக்குகளுக்கும் அப்பீல்களுக்கும் அவரை நியமிப்பது வழக்கம். இங்கு அப்பீல் என்பதற்கு நிகரான தமிழ்ச்சொல்

(1) முறையீடு (2) மேன்முறையீடு (3) பிடியாணை (4) குற்றம்

(07) தென்னை, பனை, கமுகு என்பவற்றின் இலை, ஓலை எனப்படுவது போல நெல், புல் என்பவற்றின் இலை

(1) தாள் (2) இலை (3) தோகை (4) ஓலை

(08) அரசன் சபா மண்டபத்திலே அமைச்சர், படைத்தலைவர், அறிஞர் முதலிய பரிவாரத்தினர் சூழ வீற்றிருக்குமிடம்

(1) ஓலக்கம் (2) ஓம்படை (3) ஒப்புரவு (4) மாராயம்

(09) சால்வை, மேஸ்திரி, மைதானம் என்பது எம்மொழிச் சொற்களாகும்.

(1) போர்த்துக்கேய மொழி (2) பாரசீக மொழி

(2) பிரான்ஸிய மொழி (4) ஆங்கில மொழி

(10) குரங்கு, பாட்டு, புலவன், என்ற பல பொருள் தரும் ஒரு சொல்

(1) பா (2) கவி (3) மா (4) மந்தி

(11) எண்பதாவது ஆண்டு நிறைவில் எடுக்கப்படும் விழா

(1) வெள்ளிவிழா (2) பொன்விழா (3) மணி விழா (4) அமுத விழா

(12) ‘‘மகன் இறந்ததைக் கேட்ட சந்திரமதி இடியோசை கேட்ட நாகம் போல நிலத்தில் விழுந்தாள் ‘‘ என்பதில் பயின்றுள்ள அணி

(1) உருவக அணி (2) உவமை அணி (3) சிலேடை அணி (4) முரண்அணி

(13) அந்தக் கருமியிடமிருந்து பொருளுதவி பெறுவதென்பது கல்லில் நாருரிப்பது போல **கல்லில் நாருரித்தல்** எனும் தொடர் மூலம் உணர்த்தப்படுவது,

(1) இயலாத காரியம் (2) சிரமமான காரியம்

(3) இலகுவான காரியம் (4) பலன்மிக்க காரியம்

(14) அரச துறையில் ஒரு கிளார்க் வேலையாவது கிடைத்தால் வாழ்க்கையை நிம்மதியாக ஓட்டிவிடலாம் ‘‘ கிளார்க் என்ற சொல்லுக்கு உரியதாக தமிழில் **வழங்கப்பெறாத** சொல்

(1) குமாஸ்தா (2) இலிகிதர்

(3) பதிவாளர் (4) எழுதுவினைஞர்

(15) கமலன் தன் நண்பனை ஏமாற்றினான். **ஏமாற்றுதல்** எனும் மரபுத் தொடர் உணர்த்தும் கருத்து **அல்லாதது,**

(1) கயிறு திரித்தல் (2) காலை வாருதல்

(2) தலை தடவுதல் (4) காது குத்துதல்

(16) கையும் மெய்யுமாகப் பிடிபட்ட திருடன் திருதிரு என விளித்தான். இங்கு **திருதிரு** என்பது,

(1) இணைமொழி (2) இரட்டைக்கிளவி

(3) அடுக்குத்தொடர் (4) அடுக்கிடுக்குத் தொடர்

(17) பின்வரும் பழமொழிகளில் தருமத்தின் சிறப்பினை உணர்த்தும் பழமொழி

(1) இட்டுக்கெட்டார் எங்கும் இல்லை

(2) செல்வம் என்பது சிந்தையின் நிறைவே

(3) இரக்கப் போனாலும் சிறக்கப்போ

(4) மனம் கொண்டதே மாளிகை

(18) சுகதுக்கம், வெளிவெளி என்பன முறையே

(1) இரட்டைக்கிளவி, இணைமொழி (2) இணைமொழி அடுக்குமொழி

(3) இணைமொழி, இரட்டைக்கிளவி (3) அடுக்குமொழி, அடுக்கிடுக்கு மொழி

(19) "யார் இந்தவேலையைச் செய்தது?" எனும் வாக்கியம் உணர்த்தும் உணர்ச்சி

(1) வியப்பு (2) உவகை (3) கோபம் (4) வீரம்

(20) "அவன் வேகமாக ஓடினான் இங்கு **ஓடினான்** எனும் வினையை பகுபத உறுப்புக்களாகப் பிரிக்க வருவது

(1) ஓடி + இன் + ஆன் (2) ஓடு + இன் + ஆன்

(3) ஓடி + ன் + ஆன் (4) ஓடு + ன் + ஆன்

(21) பின்வருவனவற்றுள் உடனிலை மெய்ம்மயக்கமாக இடம்பெறாத சொல்

(1) மெத்தை (2) கன்னல் (3) தென்னை (4) வண்டு

(22) "எங்கள் சொத்து எங்கள் பிள்ளகைள் " என்பது

(1) திணை வழுவமைதி (2) பால் வழுவமைதி

(3) எண் வழுவமைதி (4) இட வழுவதிமைதி

(23) "த" கரம் வேறுபட்டு அமையும் சொற்கூட்டம்

(1) தங்கம், தலை (2) பதம், சதம்

(3) பத்து, வித்து (4) வித்தை, தண்மை

(24) ஐந்தாம் வேற்றுமையின் சொல்லுருபாக **அமையாதது**

(1) உடன் (2) விட (3) இடமிருந்து (4) காட்டிலும்

(25) "தேடாதிருந்த பாரதியாரைத் தமிழுலகம் கனம் பண்ண வைத்த பெருமை விபுலானந்த அடிகளுக்கு உரியதாகும். இங்கு இடம் பெற்றுள்ள எழுவாய்

(1) பாரதியார் (2) தமிழுலகம் (3) பெருமை (4) விபுலானந்த அடிகள்

(26) கெடுதல் விகாரம் இடம் பெற்றமைந்த சொல்

(1) சிறகால் (2) கல்லால் (3) கற்சிலை (4) தேனருவி

(27) அவளது மதிவதனம் சிவந்து காணப்பட்டது, மதிவதனம் என்பது

(1) வேற்றுமைத்தொகை (2) உம்மைத்தொகை

(3) உவமைத் தொகை (4) பண்புத்தொகை

(28) ‘‘கால் தவறி விழுந்தவனைக் கைகொடுத்துத் தூக்கினான் இங்கு **விழுந்தவனை** என்பது,

(1) வினைச்சொல் (2) வினையெச்சம்

(3) வினையாலணையும் பெயர் (4) பெயரெச்சம்

- பொருத்தமற்ற உதாரணம் இடம்பெற்ற சொற்றொகுதியைத் தெரிவு செய்க.

(29) மாற்றுப் பெயர் : நான், நீ, அது

தொழிற்பெயர் : காணுதல், நடத்தல், போகாமை

ஆக்கப் பெயர் : வேலைக்காரி, படிப்பு, நூல் நிலையம்

கூட்டுப் பெயர் : புகைவண்டி, வானொலி, தொலைக்காட்சி

(30) தனிவினை : வந்தான், ஓடினான், வருவான்

தன்வினை : படித்தான், படித்தாள், உதவினான்

குறிப்பு வினை : நல்லன், கரியன், பெரியன்

பிறவினை : காட்டினான், எழுதுவித்தான், போனான்

- **புள்ளிக் கோடிட்ட இடத்தை நிரப்புவதற்கு மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

(31) அந்த நூல் தொடர்பாக முன்வைக்கப்பட்ட ……………………… பெரும் சலசலப்பை ஏற்படுத்தியது

(1) முன்னுரை (2) அணிந்துரை (3) விமர்சனம் (4) விளம்பரம்

(32) நெற் செய்கையை ஊக்குவிக்கும் நோக்கில் அரசாங்கம் விவசாயிகளுக்கு ……………….. வழங்கத் தீர்மானித்துள்ளது.

(1) நன்கொடை (2) மானியம் (3) நிவாரணம் (4) கடன்

(33) …………………… மிகவும் பொறுமையோடும் புரிந்துணர்வோடும் பராமரிக்க வேண்டும்.

(1) சித்தசுவாதீனம் உள்ளவர்களை (2) சித்த சுவாதீனக்காரர்களை

(3) சித்த சுவாதீனம் அற்றவர்களை (4) சித்தந்தெளிந்தவர்களை

(34) வேலைக்கு ஆட்சேர்ப்பது தொடர்பான அரசாங்கத்தின் உத்தியோகபூர்வ விளம்பரம் ………………….. வெளிவந்துள்ளது.

(1) வர்த்தமானியில் (2) சுற்றுநிருபத்தில்

(3) பத்திரிகையில் (4) பாராளுமன்றத்தில்

- **வாக்கியங்களின் முற்பகுதிக்குப் பொருத்தமான முடிக்கும் பகுதியைத் தெரிவு செய்க.**

(35) அவர்கள் தினமும் பாடசாலைக்குச் ……………………………….
(1) சமுகமளிப்பார்கள் (2) சமூகமளிப்பார்கள்
(3) சமுகமளித்தனர் (4) சமுகமளித்தவர்

(36) தமிழ் இலக்கிய மன்றம் முத்தமிழ் விழாவைக் ……………………..
(1) கொண்டாடின (2) கொண்டாடியது
(3) கொண்டாடினர் (4) கொண்டாடியர்

- **தரப்பட்ட பாடலை அடிப்படையாகக் கொண்டு வினாக்களுக்கு விடை தருக.**

இன்ன றுங்கனிச் சோலைகள் செய்தல்
இனிய நீர்த்தண் சுனைகளி யற்றல்
அன்ன சத்திர மாயிரம் வைத்தல்
ஆல யம்பதி னாயிரம் நாட்டல்
பின்ன ருள்ளத ருமங்கள் யாவும்
பெயர்வி ளங்கிஒ ளிரநி றுத்தல்
அன்ன யாவினும் புண்ணியங் கோடி
ஆங்கோ ரேழைக் கெழுத்தறி வித்தல்

(37) இப்பாடல் கூறும் பிரதான அம்சம்
(1) கல்வியின் முக்கியத்துவம் (2) ஏழைக்கு உதவுதல்
(3) தருமம் செய்தல் (4) ஆலயங்கள் அமைத்தல்

(38) இன்ன - இனிய ஆன்ன – ஆல …. என்பது
(1) எதுகை அணி (2) மோனைஅணி
(3) சிலேடை அணி (4) உவமை அணி

(39) பாடலில் குறிப்பிடப்பட்டுள்ள புண்ணியம் என்பதற்கு நிகரான சொல்
(1) புதுமை (2) தீமை (3) புகழ் (4) நன்மை

(40) கீழே சில வாக்கியங்கள் ஒழுங்கின்றிக் காணப்படுகின்றன. அவற்றை ஒழுங்கு பெற வைத்தால் கட்டுக்கோப்பான பந்தியொன்று அமையும் அதற்கேற்ற பொருத்தமான வைப்பு முறையைத் தெரிவு செய்க.
(அ) அவற்றின் போதனைகளை அறிந்து கொண்டு சமரசத்துடன் ஐக்கியமாய் வாழ்வது எமது கடமையாகும்.
(ஆ) உலகத்திலே பல மார்க்கங்கள் தோன்றியிருக்கின்றன.
(இ) அந்த வகையில் இந்து, பௌத்தம், இஸ்லாம், கிறிஸ்தவம், சமணம் முதலானவை தமிழ்கூறு நல்லுலகில் நற்பண்புகளை வளர்ப்பதில் அரும்பாடுபட்டன.
(ஈ) அவை அன்பையும் அகிம்சையையும் உலகில் நிலையாமையையும் கருப்பொருளாகக் கொண்டு மக்களை நன்னெறியின்பால் செலுத்தி வந்தன.
(1) ஆ, அ, இ,ஈ (2) ஆ, ஈ, இ,அ
(3) ஆ. அ, ஈ, இ (4) ஆ, ஈ, அ, இ

සියලුම හිමිකම් ඇවිරිණි
முழுப் பதிப்புரிமையுடையது
All Rights Reserved

දකුණු පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව
தென் மாகாணக் கல்வித் திணைக்களம்
Department of Education, Southern Province

දෙවන වාර පරීක්ෂණය - 2021
இரண்டாந் தவணைப் பரீட்சை – 2021

| 10 ශ්‍රේණිය<br>தரம் 10 | දෙමළ - II<br>தமிழ் மொழியும் இலக்கியமும்- II | පැය 02 යි<br>02 மணித்தியாலம் |
|---|---|---|

தமிழ் II / - දෙමළ II

**அறிவுறுத்தல்கள்**

- **ஐந்து வினாக்களுக்கும் விடையளிக்குக. .**
- **இவ்வினாத்தாளுக்குரிய புள்ளிகள் 80 ஆகும்.**

---

(01) பின்வரும் வினாக்களுக்குச் சுருக்கமாக விடை தருக

(i) பின்வரும் தொடரைச் சந்தி பிரித்து எழுதுக
"கடலோரம் வீடுகளமைத்தலாகாது"

(ii) பின்வரும் பேச்சு வழக்குத் தொடரை எழுத்து வழக்கமாக மாற்றுக.
" நீ கோவிக்கிறது சரியடா மேனே"

(iii) "அணி. " என்ற சொல் பெயராகவும் வினையாகவும் வருமாறு தனித்தனி வாக்கியம் அமைக்குக.

(iv) குகனும் இராமனும் படகில் ஏறினர். இவ்வாக்கியத்தில் காணப்படும் சமநிலைத் தொடர்களை குறிப்பிடுக

(v) "நாசா செவ்வாய்க் கிரகத்தை ஆய்வு செய்தது" எனும் வாக்கியத்தை செயப்பாட்டு வினைவாக்கியமாக மாற்றுக.

(vi) பின்வரும் பிரதேச வழக்குச் சொற்களின் நியம வழக்கை எழுதுக.
(அ) களவெட்டி (ஆ) வெரசா

(vii) பொருளமைவுக்கேற்ப பின்வரும் சொற்களை ஒழுங்குபடுத்தி கருத்துள்ள வாக்கியமாக்குக
எழுத்து, அகராதிமுறை, அரிச்சுவடியிலுள்ள தான், அமைப்பது, சொற்களை முறைப்படியே ஆகும்.

(viii) "வான நெருங்கடலிடை வெள்ளி ஓடமென.." இங்கு பயின்றுள்ள அணியைக் குறிப்பிடுக.

(ix) சுருக்கம் எழுதப்படும் சந்தர்ப்பங்கள் **இரண்டு** தருக

(x) கட்டுரை எழுதுவதற்கான **இரண்டு** படிமுறைகளைக் குறிப்பிடுக.

(2x10=20 புள்ளிகள்)

(02) பின்வருவனவற்றுள் ஒன்றைத் தெரிவு செய்து ஏறத்தாழ 250 சொற்களில் அமையுமாறு விடை எழுதுக. நீங்கள் தெரிவு செய்த விடயத்துக்குப் பொருத்தமான தலையங்கம் இடுக.

(i) இன்று நமது நாட்டில் வீதி விபத்து என்பது சர்வ சாதாரணமாகி விட்டது. ஊடகச் செய்திகளில் அவை முக்கிய இடம் வகிக்கின்றன. வீதி அபிவிருத்தியின் போதாமை இதற்கு ஒரு காரணமாகும். அதேவேளை வாகன சாரதிகளும் பாதசாரிகளும் வீதி ஒழுங்குகளையும் விதிகளையும் பேணாமையும் இளம் வயதினரின் முறையற்ற வாகனப் பாவனையும் காரணமாகும். வீதி விபத்துக்களைக் கட்டுப்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி ஒரு கட்டுரை வரைக.

(ii) இன்றைய நவீன காலத்தில் நவீன சவால்களுக்கு முகங்கொடுக்கக்கூடிய விதத்திலும் தொழில் வழிகாட்டல்களுக்கு ஏற்ற விதத்திலும் மாணவர் சமூகம் மாற்றியமைக்கப்படல் அவசியம். அதனடிப்படையில் பாடசாலைக் கல்வியில் தொழினுட்பக் கல்வியின் அவசியம் உணர்த்தப்படல் வேண்டும் என்ற கருத்திலமைந்த ஒரு மேடைப் பேச்சு

(iii) நமது நாட்டின் பொருளாதாரச் சூழ்நிலை காரணமாக வெளிநாடுகளுக்குச் சென்று தொழில் பார்ப்போர் தொகை அதிகரித்து வருகிறது. முறைசார் நிபுணர்கள் முதல் கூலித்தொழிலாளர்கள் வரையிலே இவ்வாறு வெளிநாடுகளுக்குச் செல்கின்றனர். அதனால் நமது நாட்டின் அன்னியச் செலாவணி அதிகரித்து குடும்பங்கள் பொருளாதார நிலையில் உயர்ச்சி காண்பார்களாயினும் பல எதிர் விளைவுகளையும் சந்திக்கவே நேரிடும். குடும்பங்கள் சிதைவடைவதோடு பண்பாட்டுச் சீரழிவுகளும் ஏற்படவே செய்யும். இந்த அடிப்படையில் வெளிநாட்டு வாழ்க்கையை ஆதரிக்கும் ஒருவருக்கு அதனை கண்டிக்கும் மற்றொருவருக்கும் இடையிலான ஓர் உரையாடல்.

(iv) சாந்தன் பெயருக்கேற்பவே சாந்தமானவன். ஆனால், சந்தையை இழந்து தாயோடும் தங்கையோடும் வறுமையில் தள்ளாடுபவன். எனினும், அவனது இலட்சியம் உயர் தொழிலைப் பெற வேண்டும் என்பதே. இக்கருவை மையப்படுத்திய ஒரு சிறுகதை.

(25 புள்ளிகள்)

(03) பின்வரும் உரைப்பகுதியின் சுருக்கத்தை 40 – 45 சொற்களில் அமையக்கூடியவாறு எழுதுக. (சொற்களின் எண்ணிக்கையைக் குறிப்பிடுக. )

கல்வி பயிலும் பருவம் இளமைப் பருவம் என்று சொல்லப்படுகிறது. கலைகள் பயிலுவதற்கு இளமைப் பருவமே சாலச் சிறந்தது. அதனாலேதான் ''இளமையிற் கல் '' என்றும் ஆணை பிறந்தது. மானுடராய்ப பிறந்தவர் எல்லாருக்கும் இது பொதுவான நெறி. இதன்படி ஒழுக எல்லாரும் கடமைப்பட்டிருக்கின்றனர். பிள்ளைப் பருவம் புதிதாக வனைந்த சட்டி போன்றது. அப்போது அதன் மீது பதிக்கப்படும் உயர்ந்த எண்ணங்களும், சீரிய இயல்புகளும் என்றைக்கும் மாறா. மாணாக்கர்களுக்கு தொழிற்கல்வி இன்றியமையாதது என்று இக்காலத்தில் உலகெங்கும் உள்ள அறிஞர்கள் வற்புறுத்தி வருகின்றனர். இந்தியாவும் இந்த இயக்கத்தில் ஈடுபட்டிருக்கிறது. உடல் உழைப்பை ஒட்டிய தொழில் ஆடவர் மகளிர் ஆகிய இருபாலாருக்கும் வேண்டப்படுவது என்பதும் அப்பயிற்சி இளம் பிராயத்திலேயே அளிக்கப்பட வேண்டும் என்பதும் பலர் கருத்து, ஆனால் நம் நாட்டில் முன்பு ஒரு காலத்தில் இருந்த இதைவிட முக்கியமான பயிற்சி ஒன்றை மறந்துவிடலாகாது. அக்காலத்தை விட இக்காலத்தில் அது பெரிதும் வேண்டப்படுகிறது. மானுட வாழ்க்கையானது பரஸ்பர உதவியை அடிப்படையாகக் கொண்டது. என்னும் கோட்பாடு இந்நாளில் அறவே மறைந்து போய்விட்டது. எங்கும் ஒரே போட்டி மயம். போர்க்களத்தின் காட்சியே மீண்டும் தென்படுகிறது பகுத்தளித்தல் என்னும் பண்புகளுக்குப் பதிலாக பறித்துப் பிடுங்குதல் என்னும் பாதகமே பார்க்கும் இடமெல்லாம் காட்சி கொடுக்கிறது. நவீன படிப்பு முறையே இத்தகைய துல்லிய நோக்கத்துடன் அமைக்கப்பட்டிருக்கிறது. கல்வியானது கைங்கரியமயமாய் இருந்தது போய் இப்போது போட்டி மயமாய் மாறியிருக்கிறது. என்னென்ன முறைகளில் பிறரை விடத் தாம் மேலாம் அந்தஸ்து வைக்க முடியும் என்பதுவே இக்காலத்தவர் பெறும் பயிற்சியாகும். துவேஷம் துயரமும் அதிகரிப்பது இதனாலேயேயாம்.

(10 புள்ளிகள்)

(04) பின்வரும் உரைப்பகுதியை வாசித்து அதன் கீழ்க் கொடுக்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக.

சுவர் இருந்தால் தான் சித்திரம் வரையலாம் என்பது பழமொழி உடல் ஆரோக்கியமாக இருந்தாற்றான் எத்தகைய பணிகளையும் மேற்கொள்ள முடியும். நாம் பள்ளிப்பருவத்தில் ஏட்டுக் கல்வியோடு உடற்கல்வியும் பயிலவேண்டும் என்று வலியுத்தப்படுவதற்கு இதுவோ காரணமாகும். உடற்கல்வி பெறாது ஏட்டுக் கல்வியில் நாம் எவ்வளவு அடைவுகளைப் பெற்றாலும் நாம் முழுமையான கல்வியைப் பெற்றவர்களாக ஆக முடியாது. உடற்கல்வியானது உடல் வளத்தை மட்டும் மேம்படுத்துவதல்ல. அது நம் உள்ளத்தையும் மேம்படுத்துகிறது. உடற்கல்வியினைப் பெறும் போது நாம் விளையாட்டின் விதிமுறைகளையம் அதன் நுணுக்கங்களையும் கற்று அவற்றைக் கடைபிடிக்கும் பயிற்சியினையும் பெறுகின்றோம். உடலின் அசைவுகளை ஆராய்ந்து ஒவ்வொரு அசைவும் ஏன், எதற்கு என்று அறிந்து செயற்படும் திறன் பெறுகின்றோம்.

விளையாட்டு உடற்கல்வியின் முக்கிய அம்சமாகும். விளையாட்டுப் போட்டிகளில் ஈடுபட்டு வெற்றிவாகை சூடுவோரை மக்கள் பெரிதும் பாராட்டுவர். வெற்றி வீரர்கள் என புகழ்மாலை சூட்டுவர். விளையாட்டுக்களில் ஈடுபடுவோர்களை விளையாட்டு வீரர்கள் என்நே அழைப்பர். ஆத்தகைய வீர்கள் சாதனைகளை நிலைநாட்டும் போது அவர்களுடைய பெயர் மக்கள் மனதில் பதிந்து விடுகிறது.

(1) பள்ளிப் பருவத்தில் எத்தகைய கல்வியைப் பெற வேண்டும்.

(2) உடல் ஆரோக்கியமாக இருந்தால் தான் எத்தகைய பணிகளையும் மேற்கொள்ள முடியும் என்பதற்கு பொருத்தமான பழமொழியை குறிப்பிடுக.

(3) உடற்கல்வி எவற்றை மேம்படுத்துகிறது.

(4) உடற்கல்வியின் முக்கிய அம்சம் யாது?

(5) பொருள் தருக.

(i) ஏடு (ii) உடல் (2x5=10 புள்ளிகள்)

(05) நீர் வாழும் பிரதேசத்தில் உள்ள பிரதான வீதி ஒன்று சேதமடைந்து வாகனப் போக்குவரத்திற்கு உகந்ததாக இல்லாமல் இருக்கிறது. இதனால், பாடசாலை மாணவர்கள், நோயாளிகள் ஏனைய அலுவல்களில் ஈடுபடுவோர் எனப் பலரும் பாதிக்கப்படுகின்றனர். எனவே அவ்வீதியை புனரமைக்க உடன் நடவடிக்கை எடுக்கும்படி உமது பிரதேசத்தின் உள்ளூராட்சி மன்றத் தலைவருக்கு 100 சொற்களில் ஒரு கடிதம்

ஆல்லது

அதிகரித்துவரும் பொலித்தீன் பாவனை பற்றியும் அதனால் சுற்றுப்புறச் சூழல் மாசடைவது பற்றியும் விளக்கி, பொலித்தீன் பாவனையைக் கட்டுப்படுத்துமாறு வலியுறுத்தி 100 சொற்களில் அமையுமாறு ஒரு துண்டுப்பிரசுரம் தயாரிக்குக.

(15 புள்ளிகள்)

****************

සියලුම හිමිකම් ඇවිරිණි
முழுப் பதிப்புரிமையுடையது
All Rights Reserved

දකුණු පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව
தென் மாகாணக் கல்வித் திணைக்களம்
**Department of Education, Southern Province**

**දෙවන වාර පරීක්ෂණය - 2021**
இரண்டாந் தவணைப் பரீட்சை – 2021

| | | |
|---|---|---|
| **10 ශ්‍රේණිය**<br>தரம் 10 | **දෙමළ - I**<br>தமிழ் மொழியும் இலக்கியமும்- III | **පැය 02 යි**<br>02 மணித்தியாலம் |

**கவனிக்க:**

- அறிவுறுத்தல்களுக்கேற்ப ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.
- 1, 2, 3, 4 ஆகிய வினாக்களுக்கும் 5, 6, 7 ஆகிய வினாக்களில் ஏதாவது ஒரு வினாவிற்கும் விடை எழுதுக.
- இவ்வினாத்தாளுக்குரிய புள்ளிகள் 80 ஆகும்.

---

(01) சுருக்கமான விடை தருக.

(i) ‘‘தண்டா மரையி னுடன் பிறந்தும் தண்டேன்
நுகரா மண்டுகம் …. ‘‘

(அ) மண்டுகம் என்பது எதனைக் குறிக்கிறது?

(ஆ) பாடலில் குளிர்ச்சி என்ற கருத்தைத் தரும் சொல்லைக் குறிப்பிடுக.

(ii) ‘‘எமன் கையில் பட்டபாடு பட்டேன் என்கிறார் …’’

(அ) இக்கூற்றைக் கூறியவர் யார்?

(ஆ) இச்சிறுகதையின் ஆசிரியர் யார்?

(iii) கார்தட் டியபஞ்ச காலத்திலே தங்கள் காரியப்பேர்
ஆர்தட் டினும் தட்டு ….. ‘‘

(அ) ‘‘கார்தட்டிய’’ என்பதன் கருத்தைக் கூறுக.

(ஆ) இபபாடல் யாரைப் புகழ்ந்து பாட்டதாகும்.

(iv) ‘‘சூழமேதி யிறங்குத் துறையிற்
சொரியும் பாலைப் பருகிய வாளை… ‘‘

(அ) ‘‘மேதி’’ என்பதன் கருத்து யாது?

(ஆ) இங்கு அவற்றின் இறங்குமிடம் எனும் கருத்தைத் தரும் சொல் எது?

(v) ‘‘ இந்த பைல் இஞ்ச எப்பிடி வந்தது?’’ என்றேன்

(அ) இக்கூற்று யாருக்கு கூறப்பட்டதாகும்?

(ஆ) ‘‘பைல் ‘‘ என்ற ஆங்கிலச் சொல்லின் தமிழ் வடிவம் எது?

(vi) ‘‘பூத்த ஜோதி வதனம் திரும்புமேல்

புலன ழிந்தொரு புத்துயி ரெய்துவேன்’’

(அ) ‘‘புலன் ‘‘ என்பதனூடாக குறிப்பிடப்படுபவற்றுள் இரண்டினை குறிப்பிடுக.

(ஆ) ‘‘புத்த ஜோதி வதனம் ‘‘ என்பதில் கையாளப்பட்டுள்ள அணி எது?

(vii) ‘‘ மாகம டங்கலும் மால்விடை யும்பொன்

னாகமும் நாகமும் நாண நடந்தார்’’

(அ) இவ்வடிகளில் பெருமைமிக்க ஆண் சிங்கம் எனும் கருத்தைத் தரும் சொல்லைக் குறிப்பிடுக.

(ஆ) இவ்வாறு பெருமைப்படுத்தப்படுபவரின் பெயர் யாது?

(viii) ‘‘தூங்கக் காண்பது மாம்பழக் கொத்து

சுழலக் காண்பது பூந்தயிர் மத்து,…’’

(அ) ‘‘பூந்தயிர் ‘‘ என்பதன் கருத்து யாது?

(ஆ) இவ்வடிகள் எந்நாட்டின் சிறப்புப் பற்றிக் கூறுகிறது?

(ix) ‘‘அதனுடைய பார்வை எனக்கு துண்டாய்ப் பிடிக்கவில்லை அது இருந்த விதமும் தோற்றமும் வெறுப்பைக் கூட்டியது”

(அ) இச்சிறுகதைத் தொகுப்பு நூல் எது?

(ஆ) இச்சிகதை ஆசிரியருக்கு எதனுடைய பார்வை துண்டாய்ப் பிடிக்கவில்லை எனக் கூறுகிறார்.

(x) நீதிப் பாடல் என்றால் என்ன,?

(2x10=20 புள்ளிகள்)

(02) பின்வரும் செய்யுட் பகுதிகளையும் உரைநடைப் பகுதிகளையும் வாசித்து அவற்றின் கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

(i) ‘‘தண்டா மரையினுடன் பிறந்தும் தண்டேன்

நுகரா மண்டுகம்

வண்டோ கானத் திடையிலிருந்து வந்து

கமல மதுவுண்ணும்

பண்டே பழகியிருந்தாலும் அறியார்

புல்லர் நல்லோரைக்

கண்டே களித்தங் குறவாடித் தம்மிற்

கலப்பர் கற்றோரே ‘‘

(அ) இங்கு அறிவற்றோரின் செயலுக்கு உவமானமாக் கூறப்படும் விடயம் யாது?

(ஆ) இப்பாடல் இடம்பெறும் இலக்கியம் யாது?

(ii) சூழ மாய வுலகினிற் காணுறுந்

தோற்றம் யாவையும் மானத மாகுமால்

ஆழு நெஞ்சகத் தாசையின் றுள்ளதேல்

அதனு டைப்பொருள் நாளை விளைந்திடும்

தாழு முள்ளத்தர், சோர்வினர், ஆடுபோல்

தாவித் தாவிப் பல பொருள் நாடுவோர்

வீழு மோரிடை யூற்றினுக் கஞ்சுவோர்,

விரும்பும் யாவும் பெறாரிவர் தாமன்றே

(அ) பாடலில் குறிப்பிடப்பட்டுள்ள ஒருவர் தாம் விரும்பியவற்றை அடைய இயலாமல் போவதற்கான காரணங்களில் இரண்டினைக் குறிப்பிடுக.

(ஆ) ‘‘ஆடு போல் தாவித்தாவிப் பல பொருள் நாடுவோர் ‘‘ என்பதில் உள்ள உவமான உவமேயங்களை எடுத்துக் காட்டுக.

(iii) கணக்காய ரில்லாத வூரும்பிணக்கறுக்கு

மூத்தோரை யில்லாத வவைக்களனும் - பாத்துண்ணுந்

தன்னையிலான ரயலிருப்பு மின்மூன்று

நன்மை பயத்த லில

(அ) நன்மை பயக்காத மூன்று விடயங்களும் எவை?

(ஆ) பாடலில் ஆசிரியர் யார்? இடம்பெற்ற நூல் எது?

(iv) புலவர்களுடைய பாட்டுக்களில் அவர்கள் கருதாத கருத்துக்கள் அமைகிறதுண்டு, கம்பருடைய சில அடிகளில் அன்றைக்கு அப்படிப்பட்ட பொருள் அமைந்து கிடந்தது. விலகு பிள்ளை என்று வழக்கமாக சொல்லுவதைச் சொல்லுமுன்னமே விசுவநாதபிள்ளை மேடையில் விலகி இடம்கொடுத்தார். நூவலர் அவர்களின் நிலைமை கம்பீரமான தோற்றம், வீறுகொண்ட பார்வை, எண்ணங்களின் வேகம், அவற்றை வருணிக்க அந்தச் சந்தர்ப்பத்தில் ஒரு கம்பர் இல்லை. அது கிடக்க எ டுத்துக் கொண்டு வா, தந்தி தபாற் கட்டுக்களை என்றார் நாவலர் அவர்கள். எல்லோரும் பிரமித்துப் போனார்கள்.

(அ) நாவலர் அவர்களின் நிலை பற்றி எவ்வாறு கூறப்பட்டுள்ளது.

(ஆ) ‘‘அது கிடக்க எடுத்துக் கொண்டு வா தந்தி தபாற் கட்டுக்களை‘‘ இக்கூற்றை கூறியவர் யார்?

(v) உருக்கி எடுத்த இரும்பினால் செய்த ‘‘ரெமிங்டன் ‘‘ தட்டெழுத்து பொறியில் நான் ஆரம்பகாலத் தீட்சை பெற்றவன். ஆதைத் தூக்க இரண்டு பேரும் வைக்க நாலு பேரும் வேணும் நகல் எடுக்கும் மெசின்கள் வருவதற்கு முன்னரான ஒரு காலம் அது, ஏழு கார்பன் தாள் வைத்து, கைகளை தலை உயரத்துக்கு தூக்கி, மூச்சைப் பிடித்து, தேடிக் குத்தி டைப் செய்வதில் நான் ஒரு விண்ணன் என்று பேர் வாங்கிவன். இப்படி ஒரு ஆழ்ந்த பரவசத்தோடு நான் தட்டெழுத்து லீலைகள் செய்யும் போது அம்மி பொளிவது போல ஒரு விதமான சத்தம் வரும் என்று சொல்வார்கள்.

(அ) ‘‘டைப் செய்வதில் நான் ஒரு விண்ணன்’’ ஏன்று தொடர் உணர்த்தும் பொருளைத் தருக.

(ஆ) இங்கு கையாளப்பட்டுள்ள உவமை அணியை எடுத்துக் காட்டுக.

(4x5=20 புள்ளிகள்)

(03) “நாவலர் எழுந்தார் “ எனும் பாடத்தில்

(அ) கூட்ட நடைமுறைகளை நாவலர் அவதானித்த விதம்

(ஆ) கட்டுரையாசிரியர் கையாண்ட உத்திகள் என்பவற்றை விளக்குக.

**அல்லது**

பாரதியார் சுயசரனிதை எனும் பாடத்தில்,

(அ) பாரதியார் காத்திருந்த விதம்

(ஆ) தாம் விரும்பியவற்றை அடைவதற்கு முயற்சிக்கும் விதத்தையும் தெளிவாக எடுத்துக் காட்டுக.

(15 புள்ளிகள்)

(04) குற்றாலக் குறவஞ்சியில்,

(அ) குற்றாலநாதரின் சிறப்பு

(ஆ) மலை வளம்

என்பன எடுத்தாளப்படுமாற்றினை விளக்குக.

அல்லது

கம்பியூட்டர் எனும் சிறுகதையை அடிப்படையாகக் கொண்டு

(அ) கம்பியூட்டர் வாங்க முடிவெடுத்தன் காரணம்

(ஆ) தலைப்பின் பொருத்தப்பாடு

என்பவற்றை விளக்குக.

(15 புள்ளிகள்)

- 5,6, 7 ஆகிய வினாக்களுள் ஏதாவது ஒன்றைத் தெரிவு செய்து விடை எழுதுக.

(05) நீதிப்பாடல்களில்

(அ) இனியவை நாற்பது,

(ஆ) முதுமொழி வெண்பா என்ற பாடல்களில் வாழ்வை செம்மைப்படுத்தும் விதம் எடுத்தாளப்படுமாற்றினை எடுத்துரைக்குக.

(10 புள்ளிகள்)

(06) தனிப்பாடல்களில்,

காளமேகப் புலவர் யைகாண்டுள்ள சிலேடை பற்றி தெளிவாக எடுத்துக் காட்டுக. (10 புள்ளிகள்)

(07) புகழேந்திப் புலவர் பாடலில்,

(அ) நாட்டு வளம்

(ஆ) பெண்ணின் ஏக்கம் என்பன எடுத்தாளப்பட்டுள்ள விதத்தை தெளிவுபடுத்துக. (10 புள்ளிகள்)

*******

සියලුම හිමිකම් ඇවිරිණි
முழுப் பதிப்புரிமையுடையது.
All Rights Reserved

# தென்மாகாணக் கல்வித் திணைக்களம்

## மூன்றாம் தவணைப் பரீட்சை -2021

தரம் 10

தமிழ் I- II

දෙමළ புள்ளியிடும் திட்டம் .

## பகுதி I

| | | | |
|---|---|---|---|
| 1 - (3) | 11 - (4) | 21 – (4) | 31 – (3) |
| 2 - (4) | 12 - (2) | 22 – (1) | 32 – (2) |
| 3 - (3) | 13 - (1) | 23 – (2) | 33 – (3) |
| 4 - (3) | 14 - (3) | 24 – (1) | 34 – (1) |
| 5 - (1) | 15 - (1) | 25 – (3) | 35 – (1) |
| 6 - (2) | 16 - (2) | 26 – (1) | 36 – (2) |
| 7 - (1) | 17 - (1) | 27 – (3) | 37 – (1) |
| 8 - (1) | 18 - (2) | 28 – (3) | 38 – (2) |
| 9 - (2) | 19 - (3) | 29 – (3) | 39 – (4) |
| 10 - (2) | 20 - (2) | 30 – (4) | 40 – (2) |

(1x40 = 40 புள்ளிகள்)

## பகுதி II

(01) சுருக்கமான விடைகள்

(i) கடல் + ஓரம் + வீடுகள் +அமைத்தல் +ஆகாது

(ii) நீ கோபிக்கிறது சரி மகனே.

(iii) அணி (பெயர் ) – வரிசை, அழகு, ஆபரணம்

வினை – அணிந்தான்

(iv) குகன் படகில் ஏறினான்

இராமன் படகில் ஏறினான்

(v) நாசாவால் செவ்வாய்க் கிரகம் ஆய்வு செய்யப்பட்டது

(vi) (அ) சூட்டுக்களம் (ஆ) விரைவாக

(vii) அரிச்சுவடியிலுள்ள எழுத்து முறைப்படியே சொற்களை அமைப்பது தான் அகராதி முறையாகும்.

(viii) உருவக அணி

(ix) பத்திரிகைத்துறை , விரிவுரைகளின் போது, புத்தக வாசிப்பு தொகுப்புரைகள், சுற்றுநிருபம், செய்திகள் தயாரிப்பு (எவையேனும் இரண்டு)

(x) திட்டமிடல், வடிவமைத்தல்.

(02) கட்டுரைப் புள்ளித்திட்டம்.

| | |
|---|---|
| (அ) பொருளமைவும் அளவும் | 12 புள்ளிகள் |
| (ஆ) கருத்து வெளிப்பாடும் மொழிச் செம்மையும் | 06 புள்ளிகள் |
| (இ) எழுத்து நுட்பங்கள் | 05 புள்ளிகள் |
| (ஈ) தலைப்பு | 02 புள்ளிகள் |
| | 25 புள்ளிகள் |

03. சுருக்கம்

| | |
|---|---|
| விடயம் உள்ளடக்கம் | 06 புள்ளிகள் |
| சொல்லளவு | 02 புள்ளிகள் |
| மொழி நடை | 02 புள்ளிகள் |
| மொத்தம் | 10 புள்ளிகள் |

04. i. ஏட்டுக் கல்வியோடு உடற்கல்வியும்

ii. சுவர் இருந்தால் தான் சித்திரம் வரையலாம்.

iii.. உடல் வளத்தையும் உள வளத்தையும் மேம்படுத்துகிறது.

iv.. விளையாட்டு

v. (i) புத்தகம் / நூல் (ii) மேனி / மெய்

(2 x 5 = 10 புள்ளிகள்)

05. கடிதம்

| | |
|---|---|
| அமைப்பு | 05 புள்ளிகள் |
| உள்ளடக்கம் | 07 புள்ளிகள் |
| மொழிநடை | 03 புள்ளிகள் |
| மொத்தம் | 15 புள்ளிகள் |

(மொத்தம் 80 புள்ளி)

## பகுதி III

(01) சுருக்கமான விடைகள்

(i) (அ) தவளை

(ஆ) தண்

(ii) (அ) காளமேகம்

(ஆ) அ.முத்துலிங்கம்

(iii) (அ) மழை அற்றுப் பேன

(ஆ) சீதக்காதி

(iv) (அ) எருமை

(ஆ) துறை

(v) (அ) அரவிந்தனுக்கு

(ஆ) கோப்பு

(vi) (அ) சுவை, ஒளி, ஊறு, ஓசை நாற்றம் (ஏதேனும் இரண்டு)

(ஆ) உவமை அணி

(vii) (அ) மாக மடங்கல்
(ஆ) ஆறுமுக நாவலர்

(viii) (அ) சுவையுள்ள தயிர்
(ஆ) தென் ஆரிய நாடு / திருக்குற்றாலம்

(ix) (அ) வடக்கு வீதி
(ஆ) கம்பியூட்டரின்

(x) (அ) வாழ்க்கையை செம்மையாக்கும் சீரிய நற்கருத்துக்களைக் கொண்டவை

(2x10=20 புள்ளிகள்)

(02) (i) (அ) குளிர்ச்சி பொருந்திய தாமரையுடன் பிறந்த தவளைகள் அதன் தேனை உன்னாமல் இருப்பது
(ஆ) விவேக சிந்தாமணி

(ii) (அ) தாழ்ந்த உள்ளம், சோர்வு, ஆடு போல் பல பொருள் நாடுதல் வீழும் ஒரு இடையூற்றனுக்கு அஞ்சுதல். (எவையேனும் இரண்டு)
(ஆ) உவமானம் : தாவித் திரியும் ஆடு
பல பொருள் நாடுவோர்

(iii) (அ) ஆசிரியர் இல்லாத ஊர், பிரச்சினைகளை தீர்க்கும் முத்தோர் இல்லாத சபை, பகிர்ந்து உண்ணும் குணமில்லாதவர் பக்கத்தில் இருப்பது
(ஆ) நல்லாதனார், திரிகடுகம்

(iv) ((அ) கம்பீரமான தோற்றம், வீறு கொண்ட பார்வை, எண்ணங்களின் வேகம்
(ஆ) ஆறுமுக நாவலர்

(v) (அ) அச்சடிப்பதில் நான் ஒரு கைதேர்ந்தவன்.
(ஆ) தட்டெழுத்து லீலைகள் செய்யும் போது அம்மி பொளிவது போல ஒரு விதமான சத்தம் வரும்

- 03 – 07 ஆம் வினாக்கள் வரையுள்ள பகுதிகளுக்கான விடைகளுக்கு பாடநூலை அடிப்படையாகக் கொண்டு புள்ளி வழங்குக.

==============